சிமெண்ட் உற்பத்தி.

*** 521 வினா திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிமெண்ட் தயாரிக்கும் சிறு இயந்திரத் தொழிற்சாலைகளை நிறுவ அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆமெனில், எங்கெங்கு ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கல்லக்குடிக்கு அருகில் சிறிய சிமெண்ட் ஆலையையும் மற்ற இடங்களில் சிறிய சிமெண்ட் ஆலைகளையும் அமைக்கும் உத்தேசம் உண்டா ? தனிப்பட்டவர்கள் அமைக்க வந்தால் அவர்களுக்கு அரசாங்கம் கடன் உதவியும், தொழில் நுணுக்க உதவியும் அளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சிறிய சிமெண்ட் தொழிற்சாலைகளை ஒன்பது இடங்களில் அமைக்க முடியும் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அவை அரசாங்கத்தின் சார்பில் அல்ல. தனியார் துறையில் அமைக்க விடப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்யும்.

திரு. கே. சகாதேவக் கவுண்டர் : தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் தன்னு தேர்தல் அறிக்கையிலே, 'சிமெண்ட் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவோம்' என்று வாக்குறுதி கொடுத்ததே, அந்த வாக்குறுதியை நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? ஒன்பது இடங்களிலே தொழிற்சாலைகள் என்றார்கள், எங்கெங்கு என்பதை அறிய முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, 9 இடங்களிலே தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படப் போகின்றன என்று நான் சொன்னதை ஒப்புக்கொண்ட காரணத்தால், அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படுகிறது என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் புரிந்துக்கொண்டிருப்பார் என்று கருதுகிறேன். கீழ்க்கண்ட இடங்களில் (1) கயத்தாறு, (2) அம்பாசமுத்திரம், (3) சுண்ணாம்பூர், மேலூருக்கு அருகில், (4) அரியலூர், ரெட்டிப்பாளையம் பகுதி, (5) கயிருலாபாத், அமினாபாத் பகுதி, (6) சாமல்பட்டி, ஜோலார்பேட்டைக்கு அருகில், (7) வளயார், (8) சேதாரம்பட்டு அண்ட் வானூர், பாண்டிச்சேரிக்கு அருகில், (9) சிந்தாமணிப்பட்டி, குளித்தலைக்கு அருகில் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, 9 தொழிற்சாலைகளிலும் சேர்ந்து எவ்வளவு உற்பத்தியாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறதா ? தற்போது உற்பத்தியாவதையும் இதையும் சேர்த்தால் இந்த ராஜ்யத்தின் தேவை அதிகமாக இருக்குமா ? குறையுமா ? அல்லது சரியாகுமா ?

1970 மார்ச் 24]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கும் பிரச்சினை என்னவென்றால், தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் சிமெண்டை விற்பனை செய்வதில் கஷ்டம் இருக்கிறது. ஆகவேதான், மீண்டும் இந்த உற்பத்தியைப் பெருக்குவது கூடாது என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 9 ஆலைகளுக்கு ஏற்பாடு செய்தாலும்கூட, தொடங்குவதிலே தயக்கம் காட்டுகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள வள்ளியூர் பகுதியில் ஒரு சிமெண்ட் ஆலை நிறுவ லைசென்ஸ் வழங்கப்பட்டிருந்ததே, அது என்ன ஆனது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஒரு லட்சம் டன்னுக்கு லெட்டர் ஆஃப் இன்டென்ட் கிராண்ட்டட் என்ற வகையில் டாக்டர் பி. நடராஜன் என்பவருக்கு வள்ளியூரில் கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்னாலே சிமெண்ட் தொழிற்சாலையில் பாதகம் ஏற்பட்ட காரணத்தாலே கொஞ்சம் தயக்கம் காட்டுவதுபோல் தெரிகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த 9 இடங்களிலே சேதாரம்பட்டு, பாண்டிசேரிக்கு அருகில் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாண்டிச்சேரி ஸ்டேட் வேறு, நம்முடைய ஸ்டேட் வேறு. அந்தத் தொழிற்சாலை நம்முடைய ஸ்டேட்டைச் சேர்ந்ததா, இல்லையா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நான், 'சேதாரம்பட்டு அண்ட் வானூர்' என்றுதான் சொன்னேன். வானூர் கனம் உறுப்பினருடைய தொகுதி. அது பாண்டிச்சேரிக்குப் பக்கத்தில் இருப்பதால் அப்படிக் குறிப்பிட்டுச் சொன்னது.

Expansion of border highways.

* 522 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the State Government has approached the World Bank for the expansion of the border highways?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மைசூர் எல்லை கிருஷ்ணகிரி–சேலம் வழியாகச் செல்லும் 7-ஆம் எண் தேசிய நெடுஞ்சாலையையும், சேலம்–கோயம்புத்தூர்–கோள எல்லை வழியாகச் செல்லும் 47-ம் எண் தேசிய நெடுஞ்சாலையையும் மேம்படுத்துவதற்காக உலக வங்கியின் உதவியை நாடும் செயற்குறிப்பை இந்திய அரசு ஆராய்ந்து வருகிறது. அது ஆய்வு நிலையில் உள்ளது.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister the estimated cost of the roads and from where, the roads have been proposed to be repaired?